# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.73/2023**
**PW6**

| | | |
|---|---|---|
| Name | : | வெங்கட்ராஜா |
| Father's Name | : | பாடலி |
| Village | : | சேத்துப்பட்டு |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.07.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் சேத்துப்பட்டில் குடியிருந்து சென்னையில் கல்லூரியில் படித்து வருகிறேன் . இறந்துபோன ராஜகோபால் என் தாத்தா . கடந்த 18.09.2022 அன்று மதியம் 3 - 3.30 மணி அளவில் என் அப்பா பாடலி போன் செய்து மூர்த்தி என்பவர் என் தாத்தாவை தாக்கி விட்டதாகவும் , உடனே வரவேண்டும் என்று சொன்னார் . அவரை சேத்துப்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதித்தோம். பின்னர் மேல் சிகிச்சைக்கு சென்னை செட்டிநாடு குளோபல் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தபோது நானும் , என் தம்பியும் என் தாத்தாவை பார்த்துக்கொண்டோம் . என் அம்மாவும் அப்பாவும் 25.09.2022 அன்று சேத்துப்பட்டு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார்கள். 03.10.2022 அன்று என் தாத்தாவை மதியம் 2 மணியளவில் சென்னை ராஜிவ்காந்தி மருத்துவமனைக்கு அழைத்துசெல்ல சொன்னார்கள் . நாங்கள் அவரை ராஜிவ்காந்தி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் . ஆனால் அவர் சிகிச்சை பலனின்றி 04.10.2022 அன்று மதியம் 3 மணியளவில்

இறந்துவிட்டார். சேத்துப்பட்டு காவல் நிலையத்தில் இருந்து வந்து சவக்கிடங்கில் இருந்த என் தாத்தாவின் பிரேதத்தின் மீது விசாரணை நடத்தினார்கள் . அப்போது நானும், என் தம்பி, என் அப்பா, அம்மா ஆகியோர் இருந்தோம். பிரேத விசாரணை அறிக்கை தயாரித்தார்கள். அதன்பின்னர் பிரேத பரிசோதனை செய்து பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை -</u>** இல்லை.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.